<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC. No.12/2025</u>

**<u>23.10.2025.</u>**

PW22 LW24:

**R.மணிமேகலை**

**த/பெ. திரு. ராமலிங்கம்**

**எதிரி ஆஜர் வழங்கறிஞர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**1)** 05.02.2021 தேதியிட்ட புகாரை நான் 26.02.2021 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லியுள்ளேன். 20 நாட்கள் காலதாமதாக வழக்கு பதிவு செய்ததற்கான விளக்கத்தினை எனது அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு பதிவு செய்த தேதியில் வழக்கு ஆவணங்கள் எதுவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை. மேலதிகாரியின் உத்தரவுக்கு பணிந்து இந்த வழக்கை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக ஆவணங்களை பார்வையிடவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரிதான்.

2) இந்த வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் எப்பொழுது என்னால் பெறப்பட்டது அல்லது கூட்டுறவு துறை அலுவலர்கள் எப்பொழுது ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்தனர் என்ற ஆதார விவரங்கள் எதுவும் என்னால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் CD File ல் உள்ளது. சாட்சிய விசாரணைக்கு முன்பாக இந்த வழக்கு ஆவணங்களை நான் பார்வையிடவில்லை. அதன் அடிப்படையில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் பெறுவதற்கு முன்பாகவே பிரிவு 81 விசாரணை அறிக்கையின் அடிப்படையில் அ.சா.1 கார்த்திகேயன், அ.சா. 2 விஜயகுமாரி, அ.சா.5. ராஜகுமாரி, அ.சா.8 கலா, அ,சா,3 திலகவதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன்.

ஆவணங்களை பெற்ற பிறகு ஜெயகொடி, ஸ்ரீனிவாசன், விஜயபாலன், அருள்மாறன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன்.

3) எதிரியை கைது செய்த பின்னர் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். பிரிவு 81 விசாரணை அறிக்கையை உண்மை என நம்பி கொண்டு மனசாய்வுடன் நடந்து கொண்டு எதிரிக்கு எதிராக தவறாக வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கத்திற்கு என்று துணை விதிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த துணை விதிகளை பெற்று இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நான் இடமாற்றம் செய்யப்பட்டு சென்று விட்டேன்.

4) எனது முதல் கட்ட விசாரணையிலேயே துணை விதிகள் புத்தகத்தை நான் கேட்டு பெறவில்லை என்றால் நான் கேட்டேன் அவர்கள் தரவில்லை. நான் யாரிடம் எப்போது கேட்டேன் என்பதையோ அவர்கள் தரவில்லை என்பதையோ எனது இந்த வழக்கில் பதிவு செய்துள்ளேனா என்றால் எனது வழக்கு கோப்பில் உள்ளது. நான் வழக்கு விசாரணைக்கு எடுத்துகொண்டபோது கூட்டுறவு சங்கத்தில் எத்தனை பேர் பணியில் இருந்தார்கள் என்ற விவரம் கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. ஆனால் நான் விசாரணைக்காக கூட்டுறவு சங்கத்திற்கு சென்றபோது இளநிலை உதவியாளர் அன்புச்செல்வி பணியில் இருந்தார் அவர்தான் விசாரணைக்காக கோப்புகளை எடுத்து தந்தார்.

5) முறைகேடுகள் நடைப்பெற்றதாக சொல்லும் காலகட்டத்தில் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை நபர்கள் பணியில் இருந்தார்கள் என்பது விவரம் கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. எதிரியை கைது செய்வதற்கு முன்பாக கூட்டுறவு சங்கத்தில் எதிரிக்கு பொறுப்பு ஒப்படைப்பு செய்த தீர்மானத்தை நான் பார்த்தேனா என்றால் பொறுப்பு கொடுத்திருப்பதற்கான தீர்மானத்தை நான் பார்த்திருக்கிறேன், அதனை வழக்கு ஆவணமாக நான் கைப்பற்றவில்லை என்றால் தீர்மான புத்தகத்தை நான்தான் பெற்றுள்ளேன். நான் விசாரணைக்கு

சென்ற காலத்தில் நிர்வாககுழு பதவிவகித்து பணியில் இருந்ததா என விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

6) நிர்வாககுழு உறுப்பினர்கள் தலைவர் உள்ளிட்டு யார்யார் இருந்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரிவு 81 விசாரணை அதிகாரியை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகளையும் எதிரியையும் நேரடியாக வைத்து விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். கடன்பெற்றவர்கள் தவணைத்தொகையை மாதம் மாதம் செலுத்தியிருக்கிறார்களா என்று நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் நிலுவையில்லா சான்று அளிக்கப்பட்டுள்ளது.

7) கடன்பெற்றவர்கள் கடன் தொகையை மொத்தமாக எதிரியிடம் கொடுத்துவிட்டதாகவும் அந்த தொகையை எதிரி சங்ககணக்கில் வரவு வைக்கவில்லை இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடன் பெற்றவர்கள் மாதம் மாதம் கடன் தொகையை செலுத்திருந்தால் அத்தொகையை மொத்தமாக செலுத்தவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். வழக்கு சாட்சிகள் தவணைத்தொகையை முறையாக சங்கத்திற்கு வரவு வைக்கமால் இருந்ததை நான் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) எதிரியானவர் சங்கப்பணத்தை எடுத்து கையாடல் செய்துவிட்டதாக இந்த வழக்கு இல்லை என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கத்தில் அரசால் வழங்கப்பட்டு சங்கத்தில் இருந்த பணத்தை எதிரி கையாடல் செய்ததாக வழக்கு இல்லை என்றால் சரிதான். எதிரி பணியிலிருந்த சங்கமானது நிர்வாககுழு வின் அதிகாரத்தில் கீழ் செயல்பட்டது என்பதை குறித்து அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களை முறையாக விசாரணைசெய்யவில்லை என்றாலும் சரியல்ல.

9) சங்கத்தின் வரவு செலவு பதிவேடுகளில் உள்ள கையெழுத்து பதிவுகளை யார் பதிவு செய்தது என்பதை உறுதிப்படுத்த கையெழுத்து வல்லுநர்களுக்கு அனுப்பி கருத்துரை கேட்டேனா என்றால் இல்லை. ஆனால் சங்க ரசீதுகளில் கையெப்பம் செய்தற்கான அதிகாரமானது சங்க எழுத்தராக பணியிலிருந்த கவிதா என்பவருக்கு வழங்கப்பட்டிருப்பதாக தீர்மானம் ஏற்றப்பட்டுள்ளது. அதனை கைப்பற்றி இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்மானப்புத்தகம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) நான் பார்வையிட்ட ரசீதுகளில் எதிரியின் உடைய கையொப்பத்தை தவிர வேறு எவரது கையொப்பமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் பிரிவு 81 விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மனசாய்வுடன் நடந்து கொண்டு எதிரிக்கு எதிராக சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றாலும் தவறாக இவ்வழக்கில் எதிரியை சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

LATHA Digitally signed by LATHA
Date: 2025.10.23 15:25:00 +0530

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.